# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1976/5 - 2016 ජූලි මස 20 වැනි බදාදා - 2016.07.20

*1976/5 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்க அறிவித்தல்**

*2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்கச் (திருத்தச்) சட்டத்தின் "உ" அட்டவணையின் கீழ் 100 (%) சதவீத வரிவிலக்கு அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை அகற்றுவதற்காக சுங்கப் பெறுமதியைக் கணிப்பதற்கான முறை*

*2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்கச் (திருத்தச்) சட்டத்தின் "உ" அட்டவணையின் ஏற்பாடுகளின் கீழ், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் தூதரக அமைப்புகளினால் 100 (%) சதவீத வரி விலக்கு அடிப்படையில் 2015, நவெம்பர் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை அகற்றுவதற்காக சுங்கப் பெறுமதியைக் கணிப்பதற்கான முறை இத்தால் ஆக்கப்படுகின்றது.*

*அதன் பிரகாரம், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் தூதரக அமைப்புகளினால் 100 (%) சதவீத வரி விலக்கு அடிப்படையில் 2015, நவெம்பர் மாதம் 19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை அகற்றுவதற்காக கணிக்கப்படும் சுங்கப் பெறுமதியானது, அத்தகைய வாகனங்களின் பாவிக்கப்பட்ட காலத்தின் அடிப்படையில் அவை இறக்குமதி செய்கின்ற வேளையில் உள்ளவாறான சீஜஎப் பெறுமதியிலிருந்து கீழே அட்டவணை (1) இல் காட்டப்பட்டுள்ளவாறு கணிக்கப்படும்.*

*பாவனைக் காலங்களின் கணக்கீட்டுக்காக வாகனத்தின் முதற் பதிவுத் திகதிக்கும் அகற்றும் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதி கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படுவதுடன் அத்தகைய வாகனங்களை அகற்றும் வேளையில் செலுத்தவேண்டிய அரசிறை அறவீடுகள் அத்தகைய வாகனங்களை இறக்குமதி செய்யும் வேளையில் காணப்பட்ட வரி வீதத்தில் கணக்கிடப்படும்.*

***அட்டவணை (1)***

| *முதற் பதிவுத் திகதியிலிருந்து வெளிநாட்டுத் தூதுவர்கள்/தூதரக அமைப்புக்களினால் பாவிக்கப்பட்ட காலப்பகுதி* | *சீஜஎப் பெறுமதி* |
|---|---|
| 1 வருடத்திற்குக் குறைந்தவை | 85% |
| 1 வருடத்திற்கு மேற்பட்டவையும் 2 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவையும் | 75% |
| 2 வருடங்களுக்கு மேற்பட்டவையும் 3 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவையும் | 70% |
| 3 வருடங்களுக்கு மேற்பட்டவையும் 4 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவையும் | 65% |
| 4 வருடங்களுக்கு மேற்பட்டவையும் 5 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவையும் | 60% |

**அட்டவணை (1)** (தொடர்ச்சி)

| முதற் பதிவுத் திகதியிலிருந்து வெளிநாட்டுத் தூதுவர்கள்/தூதரக அமைப்புக்களினால் பாவிக்கப்பட்ட காலப்பகுதி | சீஜைப் பெறுமதி |
|---|---|
| 5 வருடங்களுக்கு மேற்பட்டவையும் 6 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவையும் | 55 % |
| 6 வருடங்களுக்கு மேற்பட்டவையும் 7 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவையும் | 50 % |
| 7 வருடங்களுக்கு மேற்பட்டவையும் 8 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவையும் | 45 % |
| 8 வருடங்களுக்கு மேற்பட்டவையும் 9 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவையும் | 40 % |
| 9 வருடங்களுக்கு மேற்பட்டவையும் 10 வருடங்களுக்கு குறைந்தவை அல்லது சமனானவையும் | 35 % |
| 10 வருடங்களுக்கு மேற்பட்டவை | 30 % |

2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சுங்கச் (திருத்தச்) சட்டத்தின் "உ" அட்டவணையின் கீழ், வெளியிடப்பட்ட 2016, மே 19 ஆந் திகதிய 1967/53 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 1,
2016, யூலை 20.

8- 75

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.